புரட்சிக் கவிஞர்

# பாரதி தாசன்

529



O:1NBDW
N53
10664

மன்றம்

வா

# புரட்சிக் கவிஞர்
# பாரதிதாசன்

'கலைச்செல்வன்

கலை மன்றம்
சென்னை-1

O-,1NBDW
1153

வெளியீடு : 110
முதற் பதிப்பு: நவம்பர் 1953
உரிமை உடையது

விலை ரூ. 0—8—0

விற்பனை நிலையம் :
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனா பஜார்
சென்னை-1

# ஏற்று மகிழ்வீர்

★

மறுமலர்ச்சி உலகத்திலே மகத்தான மாறுதல்களை கவியின் மூலம் செய்து வரும் கவிஞர். புத்துலக சிற்பி — புதுமை பூத்துக் குலுங்கும் பூங்கா—பகுத்தறிவு மணம் வீசும் மலர் கொத்து - இணையற்ற கவிஞர் பாரதிதாசன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஓரளவு இந்த நூல் மூலம் வெளியிடுகின்றோம் மக்கள் விருப்பப்படி.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் வரலாற்றை நீங்கள் ஏற்று மகிழ்வீர் என்பது எங்களுக்குத் தெரியும்.

வணக்கம்

**கலைமன்றத்தினர்**

# ஊடுருவி எழுதியவை

●

ஆராய்ச்சி

| | |
|---|---|
| கோயில்கள் | (இங்கர்சால்) |
| சீர்திருத்தம் | ,, |
| மூடநம்பிக்கை | ,, |
| மதங்கள் | ,, |
| உண்மை | ,, |
| மக்கள் உரிமை | ,, |
| அறியாமை | ,, |
| கடவுள் | ,, |
| அரசாங்கம் | (லெனின்) |
| மாஜி கடவுள்கள் | |
| தொழிலாளர் | (மாஜினி) |

வரலாறு

கலிங்கப்போர்

வீரமங்கை ஜோன்

உலகைத் திருத்திய உத்தமர்கள் (1-ம் பாகம்)

ஒளி விளக்குகள் (2-ம் பாகம்)

சீனத்துச் சிங்கம்

ரஸ்புடீன்

வால்டையர்

நெப்போலியன்

கதைகள்

ரோமியோ-ஜூலியத் (ஷேக்ஸ்பியர்)

லைலா - மஜ்னு

நா நா (எமிலிஜோலா)

# புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

★

" கொலை வாளினை எடடாமிகு
கொடியோர்செயல் அறவே
குகைவாழ் ஒரு புலியே உயர்
குணமேவிய தமிழா. "

●

" புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்."

○

" இப்பொழுதே நீர்—போது
இன்பம் விளைத்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே—எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறு முன்பே."

○

" பொங்கு தமிழர்க் கின்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு

○

" பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில்வா!
எலிஎனஉன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலிஎன செயல்செய்யப் புறப்படு வெளியில்."

●

"என் தமிழர் மூதாதை! என் தமிழர் பெருமான்
இராவணன்காண்! அவன் நாமம் இவ்வுலகம்அறியும்."

o o o

புரட்சிக் கனல் தெறிக்கும் இந்தப் பாடல்கள் யார் பாடியவை? தூங்கிக் கிடக்கும் தமிழர்களின் இதயத்தைத் தடவி, இரத்தத்தைச் சூடாக்கி, உறங்கிக் கிடக்கும் உணர்ச்சியை எழுப்பி, 'ஏமாற்றிவிடும் எத்தர்கள்மீது பாயச் செய்யும் சக்தி வாய்ந்த இந்தப் பாடல்களைப் பாடியவர் யார்? கோழையை வீரராக்கும் அந்தக் கவிக் கோமான் யார்? 'குள்ளச் சமூகத்தின் கட்டுக்'களைத் தன் கவிதையால் தகர்க்கும் சுத்தத் தமிழர் யார்? 'மூடப் பழக்கத்தைத் தீதென்றால் முட்டவரும் மாடுகளைச் சீர் திருத்தி வண்டியிலே பூட்ட' முயற்சிக்கும் முற்போக்கு வாதி யார்?

எவ்வளவு நெஞ்சுத் துணிவோடு பாடியிருக்கிறார்! எவர்க்கும், என்றும், எக்காரணத்தைக் கொண்டும் அஞ்சாத நெஞ்சத்தினின்று தானே, இவை போன்ற புதுமைப் பாடல்கள் - புரட்சிக் கவிதைகள் தோன்றும்! உயிர்க் கதைகளை உண்டாக்கிய் உயர் கவிஞர் பழைமைப் பேய்க்குப் பயப்படாதவராகத்தானே இருப்பார். எவ்வளவு அனுவசியமாக தன் பகைமேல் பாய்கிறார்?

நேரிடையாகவே கூறுகிறாரே, கொலை வாளினை எடுத்து கொடியோர் செயலை அறு என்று. மிட்டா மிராசுகளின் பட்டம், பணங்களுக்காகக் காத்திருக்கும் போலிக் கவிகள் இப்படிப் பாடமாட்டார்களே! அவர்கள் எதற்கு இந்த வம்பிற்குப் போகப் போகிறார்கள். பணம்

படைத்த குணமிலா குபேரர்களின் படுக்கையை—படுக்கையறைப் பதுமையை—பல லட்சம் செலவழித்துக் கட்டிய பங்களாவை—பட்டாடையை பற்பல வித பாக்களால் போற்றிப் புகழ்ந்து தங்கள் வயிற்றைக் கழுவிக் கொண்டு வாழ விரும்புவரே யன்றி, நாட்டின் உழைப்பாளிகளைப் பற்றி ஏன் பாடப் போகிறார்கள். பணக்காரர்களையும்—மீறினால் பகவானையும் பாடிடுவதைத் தவிர வேறு வேலை என்ன?

ஆனால் இந்தக் கவிஞர் பிரபுக்களைப்பற்றிப் பாடவில்லை; பிரம்மாண்டமான கோயில்களில் குடியிருக்கும் கடவுள்களைப் பற்றி கவிதை இயற்றவில்லை. அதற்குப் பதில் பாட்டாளிகளைப்பற்றி பாடியிருக்கிறார்; அவர்களின் உரிமைக்கு வாதாடும்வழக்கறிஞராக இருக்கிறார். இந்த புதிய க்விஞர் யார்?

இப்போதிருப்பது போரிடும் உலகமாம். இதை வேரோடு சாய்க்க வேண்டுமோம். ஒரு சிலரிடம் குவிந்திருக்கும் பொருளை பொதுவின்பம் விளைவிக்க ஒப்படைக்க வேண்டுமாம். கட்டளையல்லவா இடுகிறார்? அதுமட்டுமா? கட்டளைக்குப்பின் எச்சரிக்கைக் காத்திருக்கிறதே! உடலில் இரத்தம் கொதிப்பேறு முன்பே ஒப்படைக்க வேண்டுமாம்! இல்லாவிட்டால் என்ன நடக்கும் என்பதைச் சொல்லாமல் நம்மையே யூகிக்க வைக்கிறார். இவ்விதமான கவிதைகளை இதற்குமுன் தமிழில் கண்டதில்லையே! இவ்விதக் கவிதைகள் தமிழ் நாட்டில் தோன்றும் என்று கனவுகூட கண்டதில்லையே!

தமிழர்க்கு இன்னல் விளைவிப்பார் இங்கு ஏராளம்; அதனாலேயே அவர்கள் வாழ்கிறார்கள். தமிழனுக்கு

இன்னல் விளைவித்துவிட்டு, தமிழ் நாட்டிலேயே தமிழனை விட நன்முக—உயர்ந்த—ஒப்பற்ற நிலையிலே — உழைக் காமல் உண்டு உலாவுகிருர்கள்; அவர்களை ஏன் இப்படி செய்கிருய் என்று கேட்டதில்லை. 'அவனவன் தலைவிதி' என்றும், 'என் தலையில் இப்படி எழுதியிருக்கு; இதை மாற்ற முடியுமா' என்றும், தங்களைத் தாங்களே நொந்து கொள்வார்களே யன்றி வேறு வார்த்தை கூறியதில்லையே அவர்கள். இன்னலிழைப்பவர்களைக் கண்டுபிடித்தவர்கள், சிலர் கண்ணிருந்தும் குருடராய் நடித்தனர்; கண்டதைக் கூற, கேட்க அஞ்சி அஞ்சி பதுங்கினர். ஆனுல் இவரோ அவர்களுக்கு 'சங்காரம் நிசம்' என்று உறுதியாகக் கூறு கிருர். இந்த உள்ள உறுதி படைத்த் உண்மைக் கவிஞர் யார்?

இராவணன் அரக்கன், அரக்கர்களின் அரசன்; ஆண்டவனும் இராமனின் அருமை மனைவி சீதா பிராட்டி யாரைத் தூக்கிச் சென்ற தீயவன்; திருப்பி அவளை அனுப்பக் கேட்டபோது மறுத்த முரடன்; எல்லாம் வல்ல இராம பிரானுல் கொல்லப்பட்ட கொடியவன். அவனைக் கம்பர்கூட, 'இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கன்' என்று வருணித்துள்ளாரே! அந்த அரக்கனையா இவர் இப்படி உயர்த்தி உரைத்துள்ளார்.

அந்த அரக்ககுல அதிபன் தமிழரின் மூதாதையாம்! தமிழரின் பெருமானும்! அவன் பெயரை உலகு அறியு மாம். என்ன நெஞ்சத்தோடு பாடியுள்ளார். நேற்றுவரை பிறரால் தூற்றப்பட்டவனை, இன்று தூயவன், பிறர் துயர் துடைப்பவன் என்று போற்றுகிருர்.

இவர் யார்? உண்மையில் இவர் உயர்ந்த கவிஞர். ஒருவேளை இவை மொழிப்பெயர்ப்பு கவிதைகளோ? ஷெல்லி, புஷ்கின் போன்றூர் இயற்றியவையின் மறு பதிப்போ! இல்லை; நிச்சயம் இல்லை. அவர்கள் தமிழைப் பற்றி ஏன் பாடுகிறார்கள்? இராவணனை அறியமாட்டார் களே? அறிந்திருந்தாலும் நாம் அறிமுகப்படுத்தியதைத் தழுவித்தானே, அர்ச்சனை நடத்தியிருப்பார். இவை தமிழ் நாட்டில் வாழும் தமிழரால் இயற்றப்பட்ட தமிழ் கவிதைகள்.

பிறநாட்டு ஒப்புயர்வற்ற கவிஞரோடு ஒப்பிட்டுப் பார்க்கத் தக்க பாடல்களை இயற்றியவர் யார்?

இப்படி புரட்சிக் **கவிஞர்** பாரதிதாசனின் கவிதை களைக் கண்டவர்கள்—நடுநிலை வழுவாத சிலர்கள்—பழமை விரும்பிகளாக இருந்தாலும் உண்மையை மறைக்க உள மிசையாத சிலர் கண்டிப்பாகக் கேட்டிருப்பார்கள். பிறரிடம் கேட்காவிட்டாலும் தங்களுக்குள்ளே இப்படி கேட்டுக் கேட்டு விடைகாண முயற்சித்திருப்பார்கள்.

தமிழகத்தையே தன்பால் ஈர்த்து, தன்னை எழுதிய வர் யாரென அறியத் தூண்டி, எழுதியவரைப் போற்றிப் புகழச் செய்தன, பாரதிதாசனின் கவிதைகள்.

'பாரதிதாசன்' என்ற பெயர் மிகக் குறுகிய காலத் தில் தமிழகமெங்கும் பரவி விட்டது; அவர் புத்தகங்கள் இல்லங்களெங்கும் காணப்பட்டன; அவர் கவிதைகள் உள்ளங்கள் தோறும் வாழ்ந்து கொண்டிருந்தன.

கடலின் கொந்தளிப்பையும், எரிமலையின் குமுறலை யும், பூகம்பத்தின் வெடிப்புச் சத்தத்தையும் மீறியவை,

பாரதிதாசனின் கவிதைகள். அவை படிப்போரின் உள்ளத்தை உருக்கின; படிக்கப் பக்கம் நின்று கேட்போரின் உள்ளத்தை கிறுகிறுக்கச் செய்தன.

சாகாத கவிதைகளை இயற்றிய பாரதிதாசனுக்குப் புரட்சிக் கவிஞர்' என்ற புது மகுடம் சூட்டி மகிழ்ந்தது தமிழுலகு.

பலரும் பாராட்டும் பல்சுவை நிரம்பிய பாடல்களை இயற்றும் பாரதிதாசன் **1891**-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் **29**-ம் தேதியில் பிறந்தார். திராவிட இனத்தினர் அடிமைத் தளையை அறுக்க உழைக்கும் அவர் பிரஞ்சியர்களின் ஆட்சிக்குட்பட்ட புதுச்சேரியில் பிறந்தார். இவர் தம் தந்தையார் கனகசபை முதலியாராவார். அவர் புதுச்சேரியில் பெரிய வணிகர். பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம்.

கவிஞர் இளமையில் பிரஞ்சு மொழிப் பள்ளியில் பயின்றார். பின் தமிழ்ப் பள்ளியிலும் கற்றார். இவருக்கு இயற்கையிலேயே கவியியற்றும் திறமிருந்தது. இளமையிலே பல பாடல்கள் இயற்றியுள்ளார். சிலவற்றைத் தம் நண்பர்க்கும் காட்டி மகிழ்வார்.

சந்தர்ப்பங்களுக்கேற்ப பாடலியற்றுவதில் கவிஞர் வல்லவர். இவருக்கு வயது பதிமூன்றிருக்கும் போது இவர் தம் கவிதா வன்மையை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்ச்சி நடந்தது.

கவிஞருக்கு பெரியம்மா ஒருவர் இருந்தார். அவருக்கு கவிஞரின் சகோதரர்களின் மூத்தவரிடம்

அதிக அன்பு அதனுல் அவரிடம் ஒரு விதமாகவும், கவிஞருள்பட மற்றவர்களிடம் வேறு விதமாகவும் நடந்து கொள்வார். இக்குணத்தைப் பலரிடமும் காண லாம். தமக்குப் பிடித்த மைந்தனுக்கு அதிக சலுகைக். காட்டும் தாய், தன் மனதிற்குகந்த மாணுக்கனுக்கு மதிப் பெண்களை (**marks**) அதிகமாக தரும் ஆசிரியர், தான் விரும்பும் நபரை பதவியிலுயர்த்துவதும் அலுவலக உரிமையாளர், தனக்குப் பிடித்த எழுத்தாளரின் கதைகள் நன்ருக இல்லாவிடினும் பத்திரிகையில் வெளியிடும் பத்திரிகாசிரியர் ஆகியோர் எங்கும் உள்ளனர். அவர்களுள் கவிஞரின் பெரியம்மாவும் ஒருவர்.

கவிஞரின் பெரியம்மா ஒரு சமயம் ஒரு சீப்பு வாழைப்பழம் வாங்கிக் கொண்டு வந்தார். அதில் கவிஞ ருக்கும், அவர்தம் உடன் பிறந்தார்க்கும், தலைக்கு ஒரு பழம் கொடுத்தார் அவரது அன்பிற்குகந்த மூத்த மகனுக்கு மற்றவர்களை விட அதிகம் தர விழைந்தார். ஆனுல் எல்லோர் முன்னிலையிலும் அவ்விதம் செய்ய விரும்பவில்லை. யாவருமறிய மூத்த மகனுக்கு அதிக பழங் கள் தந்தால் மற்றவர்கள் குறைகூறக் கூடும். 'அவனுக்கு மட்டும் அதிகமாக ஏன் கொடுத்தாய்?' என்ற கேள்விக ளெழும்பலாம். அதுவுமின்றி, அவ்வாறு தருவது உண்மையில் சரியல்ல என்பதை அவர் நெஞ்சு நன்கறிந் திருக்கும். அதனுல் பிறரறியா வண்ணம் மூத்த மகனுக்கு மீதியிருக்கும் பழங்களைத் தர எண்ணினர். அநீதி மறைந்து தானே வாழ்கிறது!

பெரியம்மா மீதியிருந்த பழங்களை பழங்கல அறை யுள் ஒளித்து வைத்து விட்டாள். பிறகு அதை எடுத்

துண்ணுமாறு பெரிய மகனுக்கு சைகைசெய்தாள். ஆனல் அவன் பெரியம்மாவின் சைகையின் உட்பொருளை உணர வில்லை. நம் கவிஞர் தம் பெரியம்மாவின் நேர்மையற்ற தன்மையைக் காணத் தவறவில்லை. தம்மையும், பிற சகோதரர்களையும் வஞ்சித்து பெரிய பையனுக்கு நிறைய பழங்கள் தருவது சரியல்ல என்று எண்ணினர்.

பெரியம்மா, மூத்தமகனுக்குச் சைகை செய்தபின் அவ்விடம் விட்டகன்ருர். கவிஞருக்கு வாழைப் பழங்களிருக்குமிடம் தெரியும், அவர் உடனே பழங்கல அறையுள் நுழைந்தார். அங்கிருந்த பழங்களைத் தின்று தீர்த்தார். பழத்தோல்களை யெல்லாம் பழமிருந்தவிடத்தில் வைத்துவிட்டு வெளியே வந்துவிட்டார்.

பெரியம்மா மூத்தமகன் தம் சைகையை அறியவில்லை என்றுணர்ந்தாள். பெரிய பிள்ளையை மீண்டும் கூப்பிட்டு பழங்கல அறையுள் தாம் அவனுக்கென பழம்வைத்திருப்பதைக் கூறி, போய் எடுத்துக்கொள்ளச் சொன்னர்கள். பெரிய பிள்ளை, தமக்குக் கிடைக்கப்போகும் பழங்களை எண்ணி மகிழ்ந்தவாறு பழங்கல அறைக்குள் நுழைந்தான். பெரியம்மா குறிப்பிட்ட விடத்தில் கைவைத்துப் பார்த்தான். பழங்களுக்குப் பதில் பழத்தோல்கள் கிடைத்தன. 'பாய்ந்து எடுத்துக்கொள்வாள்' என்று பாசத்தோடு தாயிடம் செல்ல, அவள் ஓங்கி ஓரறை கொடுத்தால் சேயுக்கு எப்படி யிருக்கும்? பழத்திற்குப் பதில் தோல்களைக் கண்ட பெரிய பிள்ளை பதைபதைத்தான். உடனே கண்ணீர் சொரிந்தவண்ணம் பெரியம்மாவிடம் கவிஞர் எடுத்துத் தின்றுவிட்டு தோல்களை வைத்திருக்கும் விஷயத்தைக் கூறினன். பெரியம்மாவிற்கு கோபம் வந்தது

என்பதைச் சொல்லத் தேவையில்லை. முடிவில் இந்தச் செய்தி கவிஞரின் தந்தைக்கும் எட்டியது.

கவிஞர் செய்தி தந்தைவரை சென்றுவிட்டதை யறிந்தார். 'உடனே நடந்தவற்றை அவரிடம் நேரில் சென்று சொல்வதற்குப் பதில் அதை எழுத்துருவாக்கித் தந்தையிடம் தந்தார். எழுத்துருவென்றால் ஏனையோரை போன்று உரைநடையிலல்ல; ஒரு சின்னஞ்சிறு பாடல் வடிவில் நிகழ்ந்ததை எழுதித் தந்தார். அந்தப் பாடல் இதோ இருக்கிறது. படித்துப் பாருங்கள்.

"பழங்கலத்திலே பழங்களைத்தான்
பார்த்துத் தேடி பயல்களைத்தான்
கிழங்களைத்தான் உதைக்கவேண்டும்
கெடுநினைப்பே அதிகமப்பா
ஒழுங்குபட வாழைச்சீப்பில்
ஒன்று விழுக்காடு தந்தாள்;
விழுங்கிடவே அண்ணுவுக்கு
மீத்துக் கொடுக்க மறைப்படுதென்ன ?"

கவிஞர் தம் பதிமூன்றும் வயதில் வரைந்த பாடல் எப்படி யிருக்கிறது? இதைப் படித்த பின்பும் மகனிடம் கோபம்கொண்டு கண்டிக்க எத்தந்தைதான் இசைவான்?

கவிஞர் சிறுவயதில் பாடசாலையில் நடைபெறும் பல நாடகங்களில் முக்கிய பாக மேற்று நடிப்பதுண்டு. அவர் நன்றாகப் பாடுவார். நம் கவிஞர் கல்வியைப் புறக் கணிக்கவில்லை. படிப்பதில் ஆர்வங் காட்டினார். தம் பதி னாரும் வயதில் கல்வே கல்லூரியில் சேர்ந்தார்; தமிழ்ப் பண்டிதர் தேர்வுக்காகப் படித்தார். கவிஞர் இயல்பாகவே

தமிழ்ப் பற்றுடையவர்; எனவே அதை விரும்பிக் கற்றதில் வியப்பில்லை. இரண்டாண்டிற்குள் பாடத்தை முடித்துக்கொண்டு தேர்வுக்கமர்ந்தார். இவருடன் ஏறக்குறைய முப்பது மாணக்கர்கள் எழுதினர். அவர்களுள் இவரே முதலாவதாகத் தேறினர்.

புதுவையிலேயே முதன்மையாகத் தேறிய நம் கவிஞருக்கு அரசாங்கத்தார் ஆசிரியர் பதவியளித்தனர். பதினெட்டு வயதில் இளங்காளை பள்ளியாசிரியராக நியமிக்கப் பெற்றார். முதன் முதலில் இவரை, காரைக்காலுக்கடுத்துள்ள நெரவை என்ற கிராமத்துப் பள்ளிக்கூடத்திற்கு ஆசிரியராக அனுப்பினர். கவிஞர் முதல்நாள் அக் கிராம பள்ளிக்கு வேலையினை ஏற்கச் சென்றார்.

பள்ளிக்கூடத்திற்குப் புதியதாக வந்திருக்கும் பதினெட்டு வயதுடைய இளைஞரான கவிஞரைக் கண்ட மாணவர்கள் இவர் யாரென எண்ணினர். பள்ளித் துவங்கியதும் மாணவர்கள் தங்கள் வகுப்பறைக்குள் புகுந்தனர்.

பள்ளித் தலைவர் வகுப்புக்கு நம் கவிஞருடன் வந்தார். மாணவர்களிடம் வழக்கப்படி கவிஞரை, 'இவரே உங்கள் புதிய ஆசிரியர்' என்று அறிமுகப்படுத்தினர். உடனே மாணவர்கள் சிலையானார்கள்; வியப்புக் கடலுள் முழுகி முழுகி எழுந்தார்கள்.

மாணவர்களின் வியப்பிற்கும், வெட்கத்திற்கும் காரணம் அவர்களில் சிலர் பத்தொன்பது, இருபது வயது உடையவராக இருந்ததுதான்.

கவிஞர் ஆசிரியராகச் சேர்ந்த தினத்தன்றுதான் அப்பள்ளியில் சிறப்பு விழாவும் முறைப்படி நடந்தது.

அவ்விழா காண ஊர்மக்கள் அங்கு கூடியிருந்தனர். கவிஞருடன் அவரது தந்தையாரும் சென்றிருந்தார். ஊர் மக்கள் பள்ளிக்குப் புதிதாக வந்திருக்கும் ஆசிரியர் கவிஞரின் தந்தையார்தான் என்று எண்ணிவிட்டனர்.

பள்ளித் தலைமையாசிரியர் கட்டிளங் காளையான கவிஞரை அழைத்து, "நீங்கள் தமிழாசிரியர். உங்களுக்குத் தான் பூசையை முறைப்படி நடத்தத் தெரியும். நீங்கள் வந்து பூசையினைச் செய்யுங்கள்" என்றழைத்தார். அப்போதுதான் ஊர் மக்கள் புதிய ஆசிரியர் **18**-வயது இளைஞன் என்பதை அறிந்து, வியந்து பாராட்டினர்.

கவிஞருக்கு ஆசிரியர் வேலை கிடைத்ததே ஆச்சர்யம் தான். ஏனென்றால் கவிஞருக்கு ஏராளமான எதிரிகள் இருந்தனர். குறும்புத்தனம் மிகுந்த கவிஞருக்குச் சொந்த வீட்டிலேயே எதிர்ப்பு இருந்தபோது வெளி யுலகில் எதிர்ப்பிருந்ததில் ஆச்சர்யமொன்றுமில்லை.

கவிஞர் பண்டிதர் தேர்வு கருதி கல்லூரியில் படித் துக்கொண்டிருக்கும்பொழுது அவரது ஆசிரியராயிருந்த வர் பங்காரு பக்தர். அவர் தெற்று வாயர். அவர் ஒரு நாள் கல்லூரியில் "இராமாயணக் கருப்பொருள்" என்ற நூலில் 'தொக்கரக்கரை' என்று தொடங்கும் பாடலை நடத்தவேண்டியிருந்தது. தெற்றுவாயரான அவர்வல்லின மிகுந்த அப்பாடலுக்குப் பொருள் கூறும்போது அதிகம் தெற்றிவிட்டார். நம் கவிஞர் அதிகமாகச் சிரித்து விட்டார்.

பங்காரு பக்தருக்கு வந்த சினத்துக்கோர் அளவே யில்லை. அன்றிலிருந்து கவிஞரை அவர் தம் பகைவ

ராகவே கருதினர். எப்போதும் அவரை எதிர்த்தே வந்தார். அவ்வளவு எதிர்ப்பிருந்தும் கவிஞர் தேர்வில்முதல் வராகத் தேறியது வியப்பிற்குரிய செய்திதான்.

தமிழாசிரியர் வேலைக்கு இருபது பேர் போட்டிப் போட்டனர். அவர்களில் ஒருவர் கவிஞர். பங்காரு பக்தர் கவிஞர் ஆசிரியராவதை விரும்பவில்லை. தம்மைக் கண்டு எள்ளி நகையாடிய இளையன் ஆசிரியராவதா என்ற எண்ணம் அவருக்கு, கவிஞருக்கு ஆசிரியர்பதவி கிடைக்காமல் செய்ய முனைந்தார்.

"சுப்புரத்தினம் சின்னப்பையன். அவனுக்கு ஆசிரியராகும் தகுதி யேது?" என்று கூறினர். அதோடு நிற்கவில்லை. தம்பி புருஷோத்தமன் என்ற பிரின்ஸ்பாலையும் அவ்விதம் சொல்லவைத்தார்.

திரு. கையார் என்பவர் கல்வி இலாக்காத் தலைவரின் செயலாளர். அவர் மேற்சொன்ன இருவர்க்கும் எதிரி; அவர், அவ்விருவரும் நம் கவிஞர் ஆசிரியராகத் தகுதியற்றவர் என்று கூறியதை அறிந்தார். அவர் சுப்புரத்தினம் தான் அதற்குத் தகுதியானவர் என்பதைச் சட்டத்தால் நிரூபித்துக் காட்டினர். அதன் பிறகே நம் கவிஞர் ஆசிரியரானர்.

கவிஞர் படித்ததை ஞாபகம் வைத்துக்கொள்ளும் திறமுடையவர், கவிஞர் வேலை பார்த்துவந்த பள்ளிக்கூடத்திற்கெதிரே ஒரு வீடிருந்தது. அவ்வீட்டில் விசுவலிங்கம் பிள்ளை என்ற தமிழ் வித்வான் வசித்து வந்தார். அவர் வீட்டுத் திண்ணையில் தமிழ்ச் சொற்பொழிவுகள்

நடப்பது வழக்கம். அத்திண்ணைக்கு 'சங்கப்பலகை' என்று பெயர்.

வழக்கப்படி ஒருநாள் அங்கு வித்வான் விசுவலிங்கம் பிள்ளை பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணச் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். அப்பொழுது "அல்லையீதல்லை யீதென மறைகளும்" எனத் தொடங்கி, "ஆசையென் சொல்வழி கேளா" என முடியும் அவை யடக்கச் செய்யுளைக் கூறினார். ஆனால் செய்யுளை முடிக்கும் போது. "ஆசையென் சொல்வழி கேளாய்" எனக் கூறி முடித்துப் பொருளுரைத்தார். நம் கவிஞர் இதைக் கேட்டார். வித்வான் புரிந்த பிழையை அறிந்தார். மற்றவர்கள் போல பேசாமல் தலையாட்டிக்கொண் டிருக்கவில்லை. அவர் விசுவலிங்கம் பிள்ளையிடம் "கேளாய்" அல்ல. 'கேளா' என்றிருக்க வேண்டும்" என்றார்.

விசுவலிங்கம் பிள்ளை கவிஞரை எவ்வளவு வயது பெரியவர், அனுபவசாலி. அவ்வூரில் தமிழறிந்த பெரியாராக மதிக்கப்பட்டவர். அவர் பிரசங்கத்தில் நேற்றுவந்த இளைஞர் குறை சொல்வதை எப்படி ஏற்றுக்கொள்வார்? நம் கவிஞர் கூறியதை ஏற்கவில்லை. மேலும் சின்னப்பையன் நம் சொற்பொழிவில் குற்றங் கூறினனே என்ற கோபத்துடன் "நீ சின்னபிள்ளை உனக்கென்னப்பா தெரியும்?" என்று அலட்சியமாகக் கூறிவிட்டுத் தன் சொற்பொழிவைத் தொடர்ந்தார். சுப்பையபிள்ளை என்ற ஒருவர் அக்கூட்டத்தி லிருந்தார். அவர் தமிழன்பர். நம் கவிஞர் கூறியது சரியென அவர் மனதில் தோன்றியிருக்க வேண்டும். அதை நிச்சயப் படுத்திக்கொள்ள ஒரு ஆளை அனுப்பி திருவிளையாடற் புராணத்தைக் கொண்டுவரச்

செய்தார். அதில் 'கேளாய்' என்றிருக்கிறதா 'கேளா' என்றுளதா என்று பார்த்தார். புத்தகத்தில் நம் கவிஞர் கூறியபடி 'கேளா' என்றிருந்தது அதை அவர் மற்றவர்களிடமும் காட்டினர். விசுவலிங்கம்பிள்ளை வெட்கித் தலை குனிந்தார். அவரது அகங்காரம் பறந்து விட்டது.

அன்று முதல் அவ்வூர் மக்கள் உருவு கண்டு எள்ளாமை வேண்டும் என்பதை நன்குணர்ந்து நம் கவிஞரிடம் அன்பாக நடந்து கொண்டனர்; அவரை ஒரு தமிழ் பெரியாராக எண்ணி மதித்தனர்.

கவிஞர் தம் இருபத்தொன்பதாம் வயதில் பெருமாத்தூர் திரு. பரதேசி முதலியாரின் மகள் பழனியம்மாளை மணம் புரிந்து கொண்டார். கவிஞரின் வாழ்க்கைத் துணைவியார் கணவரின் உள்ளமறிந்து நடக்கும் நற்பண்பு வாய்ந்தவர். கவிஞரின் இல்லற வாழ்க்கை இனிமையாகவே இருந்தது.

ஒரு சமயம் வேணு நாய்க்கர் என்பவர் வீட்டில் திருமணம் ஒன்று நடைபெற்றது. அங்கு பலர் கூடியிருந்தனர். நம் கவிஞர் கனகசுப்புரத்தினம் நன்ருகப் பாடும் ஆற்றல் பெற்றவர் என்பது அனைவர்க்கும் தெரியும். கவிஞர் பாரதியார் இயற்றிய 'வீரசுதந்திரம்' என்ற பாடலை தன்யாசி ராகத்தில் உணர்ச்சியோடு, பொருளுணர்ந்து பாடிக்கொண்டிருந்தார். அப்போது பாரதியார் பின்புறம் வந்தமர்ந்து பாட்டை ரசித்தார். பாரதியார் தாம் பாடுவதைக் கேட்டுக்கொண் டிருக்கிருர் என்பது கவிஞருக்குத் தெரியாது.

கவிஞர் பாடிமுடித்ததும், பாரதியார் நம் கவிஞரிடம் நான் அமைத்த மெட்டில், ராகத்தில் என் கருத்தின்படி, சிறிதும் பிசகாது நன்றாகப் பாடினாய்" என்று கவிஞரைப் பாராட்டினார். வேணு நாய்க்கர் கவிஞரை பாரதியாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

இதன்பிறகு கவிஞர் பாரதியாருடன் நெருங்கிப் பழகினார். பாரதியாரின் அன்புக்குரியவரானார். அவரது நம்பிக்கைக்குரியவர்களில் முதல்வராக விளங்கினார். பாரதியார் மூலம், வ. வே. சு. ஐயர், அரவிந்தர் போன்றோரின் நட்பும் நம் கவிஞருக்குக் கிடைத்தது.

பாரதியார், நம் கவிஞரை நன்கு அறிந்தவர், அவரது ஆற்றல்களையும் உணர்ந்தவர், ஒருநாள் பாரதியார் வீட்டில் வ. வே. சு. ஐயர், நம் கவிஞர் முதலியவர்கள் கூடி வழக்கம்போல் பேசிக்கொண் டிருந்தனர். பலவற்றைப் பற்றி பேசிக்கொண்டிருந்த அவர்கள் மத்தியில் கவிஞர் களையும், கவிதைகளையும் பற்றிய பேச்சு எழுந்தது. அதைப்பற்றி அனைவரும் விவாதித்துக்கொண் டிருந்தனர்.

இந்த நல்ல சந்தர்ப்பத்தைத்தான் பாரதியார் எதிர் பார்த்தார் போலிருக்கிறது. உடனே, "சுப்புரத்தினம் ஒரு கவி, அவருக்கும் பாட வருமே" என்று கூறினார். அதைக் கேட்ட வ. வே. சு. ஐயரும், வேறு சிலரும் ஏளனமாக, "அப்படியென்றால் பாடச் சொல்லுங்கள் பார்ப்போம்" என்றனர்.

பாரதியார் நம் கவிஞர் பக்கம் திரும்பினார். 'பாடு' என்று சொன்னார். அவருக்கு மற்றவர்கள் ஏளனமாகக் கூறினார்களே என்ற ஆத்திரம்—'சுப்புரத்தினம் நிச்சயம்

கவியாற்றுவார்' என்ற தைரியம்—ஆகியவற்றுடன் கவிஞ ரைப் பார்த்துக்கொண் டிருந்தார்.

நம் கவிஞர், பாரதியார் சொன்னவுடனே எழுந்தார். பாரதியார் வழக்கமாக அமர்ந்து பாட்டெழுதும் பெட்டி யின் முன் உட்கார்ந்தார். "எங்கெங்கு காணினும் சக்தியடா" என்ற பதினறு வரியுள்ள இரண்டடி பாட்டை எழுதினர்; அதைப் பாரதியாரிடம் தந்தார். அதைப் படித்ததும் பாரதியார் ஆனந்தமடைந்தார். அதை மற்றவர்க்கும் படித்துக் காட்டினர். கூடியிருந்த அனைவரும், கவிஞரின் திறம் கண்டு பாராட்டினர். பாரதி யார் இவரது ஆற்றலை எப்படியோ உணர்ந்து கொண் டாரே என்று வியந்தனர்.

பாரதியார் கவிஞர் எழுதிய பாட்டின்மேல், "சுப்பிர மணிய பாரதியார் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக-சுப்புரத்தினம் பாடியது" என்ற குறிப்பை எழுதி சென்னையிலிருந்து வெளிவரும் 'சுதேசமித்திர'னுக்கு அனுப்பினர். பத்திரிகையில் அக்கவிதை வெளியானதும் மக்கள் அதைப் படித்துச் சுவைத்துப் பாராட்டினர். பின்னர் அதே கவிதை ஆங்கிலத்திலும் மொழி பெயர்க் கப்பட்டு, "**Bombay Standard**" என்ற பத்திரிகையில் வந்தது. பின்னர் 'கவிதா மண்டலத்'திலும் வெளிவந்தது. அதன்பின் 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற கவிஞரின் கவிதைத் தொகுப்பிலும் சேர்க்கப்பட்டது.

ஒருநாள் பாரதியார், கவிஞர், வ. வே. சு ஐயர் மற்றும் சிலர் கூடி பேசிக்கொண் டிருந்தனர். அப்போது புதுவை முத்தியால்பேட்டை கிருஷ்ணசாமி என்பவர்

அங்கு வந்தார். அவர் பாரதியாருக்கும், கவிஞருக்கும் நண்பர். கிருஷ்ணசாமி 'ஜஸ்டிஸ்' பத்திரிகையோடு வந்திருந்தார். கிருஷ்ணசாமியை வரவேற்றனர் பாரதியாரும், மற்றும் சிலரும்.

வ. வே. சு. ஐயர் கிருஷ்ணசாமியின் கைப்புறத்தில் ஒரு பத்திரிகை இருப்பதைக் காணத் தவறவில்லை. உடனே, "கிருஷ்ணு! அது என்ன பத்திரிகை? இங்கே கொடு பார்க்கலாம்" என்று கேட்டார். அவர் அது 'ஜஸ்டிஸ்' பத்திரிகை என்பதை அறியமாட்டார். கிருஷ்ணசாமி முதலில் சிறிது தயங்கினார். பின்பு சிறிது தைரியத்தோடு "இது 'ஜஸ்டிஸ்' பத்திரிகை" என்று கூறினார்.

வ. வே. சு. ஐயர் அப்பத்திரிகையை கையில் வாங்கிக் கொண்டார்; ஆனால் படிக்கவில்லை. "கிருஷ்ணு! பொருளாதாரம், உத்தியோகம் முதலிய துறைகளில் பிராம்மணரல்லாதார் முன்னேறி, பிராமணர்களுக்குச் சமமாக விளங்க வேண்டும் என்பது இந்த ஜஸ்டிஸ் பத்திரிகையின் நோக்கம். பிராமணரல்லாதார், அங்நிலையடைய முயலுங் காலமெல்லாம் பிராமணர்கள் சும்மாவா இருப்பார்கள்? அவர்களும் முன்னேற மாட்டார்களா? பிறகு "எப்படி இருவரும் சமநிலை அடையமுடியும்? எனவே பிராமணரல்லாதவர் சமநிலையடைய முடியாது என்பது என் கருத்து" என்றார்.

ஐயர் இப்படி கூறிவிட்டுப் பேசவுமில்லை; உரக்கச் சிரித்தார்; சிரித்துக்கொண்டே பாரதியாரைப் பார்த்தார். பாரதியார் தம் பக்கம் பேசு வாரென எதிர்பார்த்தார். பாரதியார் எவர் சார்பிலும் பேசவில்லை. மற்றவர்கள்

ஒன்றும் கூறவில்லை. ஆனால் கவிஞர் பேசாமடந்தையாக இருந்துவிடவில்லை. அவர் ஐயரைப் பார்த்து, "பிராமண ரல்லாதவர்கள் மிகப் பலர். அவர்கள் அடிதடியில் கிளம்பி விட்டாலோ?" என்று உடனே கேட்டார்.

ஐயர் என்ன பதில் கூறுவர்? என்ன பதில் கூறமுடியும்? அவர் அதற்குப் பதிலளிக்கவில்லை. சிறிது நேரம் சென்றதும் ஐயர் பேச்சை வேறு துறையில் சாமர்த்தியமாகத் திருப்பினர், பேச்சு முடிந்தபின் அவர் போய் விட்டார். கிருஷ்ணசாமியும், கவிஞரும் பாரதியாருடனிருந்தனர். பாரதியார் அவர்களிடம் மட்டும், "சுப்புரத்தினம் கேட்டதுதான் சரியான கேள்வி. ஆணித்தரமான பேச்சு. அப்படித்தான் பயப்படக்கூடாது. ஜனங்களின்—பெரும்பாலோரின்—அபீஷ்டம், கொடிய கட்டுத் திட்டமும், சட்டங்களும் தூளாகும்படி, அடிதடி சகிதம் உண்டாவதுதான் புரட்சி. அதை நிலைநிறுத்துவதுதான் மக்களின் வெற்றி" என்று கூறினர்.

இச்சம்பவமே, கவிஞருக்கு பாரதியாரிடம் மதிப்பு ஏற்பட்டதற்கு முக்கிய நிகழ்ச்சியாகும்.

ஒரு சமயம் பெருங் காற்றும் மழையும் கலந்து புதுவையைப் பாழ்படுத்தின. பாரதியார் அதனால் விளைந்த சேதங்கள் பற்றிப் பத்திரிகைகளுக்குப் பல கட்டுரைகள் எழுதினர்.

சில ஆண்டுகளுக்கு முன்னே, மறைந்த பாரதியாரின் கட்டுரைகளையும் கவிதைகளையும் 'சுதேசமித்திரன்' பழைய பிரதிகளிலிருந்து தேடி எடுப்பதற்காக வா. ரா. உள்ளிட்ட ஒரு குழுவை நியமித்தனர். அக்குழுவினர்

சில கட்டுரைகளை வெளியிடாமல் மறைத்துவிட முயற்சித்தனர். அவற்றுள் முக்கியமானவை "காற்றும், கனக—சுப்புரத்தினமும்" என்ற பாரதியாரின் கட்டுரையும், கவிஞரின் சக்திப் பாட்டிற்குப் பாரதியார் எழுதிய குறிப்புமாகும்.

சென்ற உலகப் பெரும் போர் முடிந்தவுடன் **1919**-ஆம் ஆண்டில் பிரஞ்சிந்தியாவில் எல்லா தேர்தல்களும் தொடர்ந்து நடந்தன. அப்பொழுது திரு. ஆன்றி கெப்ளே என்பவர் நல்ல செல்வாக்குப் பெற்றவராயிருந்தார். கவர்னர் முதல் சாதாரண சிப்பாய்வரை அனைவரும் அவர் ஆட்டுவித்தப்படி ஆடுவர்.

அப்பொழுது கவிஞர் ஓர் ஆசிரியராக இருந்தார். அந்த வட்டத்தில் **5050** ஓட்டர்கள் இருந்தனர். அந்த வட்டத்தில் திரு. குட்டியா சபாபதிப்பிள்ளை என்பவர் தேர்தலுக்கு நின்றார். கவிஞர் பிள்ளையவர்களை ஆதரித்தார். ஏறக்குறைய எல்லா ஓட்டுகளும் சபாபதிப் பிள்ளைக்கே விழுந்தன. பிள்ளையை எதிர்த்து நின்றவர் கெப்ளே. அவருக்கிருந்த செல்வாக்கால், அதிகாரிகள் பிள்ளையவர்களுக்கு விழுந்த ஓட்டுகளை கெப்ளேவுக்கு விழுந்ததாக பொய்க் கணக்கெழுத முயற்சித்தனர். நீதிக்குப் புறம்பானவற்றைக் கண்டிக்கும் பண்புள்ள நம் கவிஞர் அதிகாரிகளின் முயற்சியைப் பயனற்ற தாக்கிவிட்டனர். அது கவிஞர் செய்த பெரிய குற்றமாயிற்று.

தேர்தல் சமயத்தில் அவரைச் சிறைப்படுத்திவிட்டால் தேர்தல்களை விரும்பிய வண்ணம் நடத்திக் கொள்ளலாம் என்ற எண்ணத்தால் கவிஞர் .மீது பல 'வாரண்டு

கள்' பிறப்பிக்கப்பட்டன. கவிஞர் அஞ்சவில்லை; அயரவில்லை. வாக்காளரின் பேராதரவினால் நான்கு தேர்தல்களையும் வெற்றிகரமாக முடித்துக் கொண்டபின், தாமாகவே நீதிமன்றத்திற்குச் சென்றார். ஒரு மாதம் மூன்று நாள் சிறையில் (ரிமாண்டில்) வைக்கப்பட்டார். அவர் மீதிருந்த வழக்கு பத்து மாதம்வரை நடந்துகொண்டு வந்தது. ஆனால் பிரஞ்சு அரசாங்கப் போர் வெற்றியின் காரணமாக அளிக்கப்பட்ட பொது மன்னிப்புச் சட்டப்படி கைவிடப்பட்டது.

**1928**-ம் ஆண்டில் கவிஞரின் மனதைச் சுயமரியாதை இயக்கம் கவர்ந்தது. சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளை அவர் ஏற்றுக்கொண்டார். தாழ்த்தப்பட்ட திராவிடரின் உயர்வுக்காகப் பாடுபட தீர்மானித்தார் கவிஞர். மூட பழக்கவழக்கங்களை முறியடிக்க முற்பட்டார். சுருங்கச் சொன்னால் பக்தர் சுப்புரத்தினம் பகுத்தறிவுவாதி சுப்புரத்தினமானார்.

கவிஞர் சுயமரியாதை இயக்கத்தைச் சார்வதற்கு முன் பக்தராக இருந்தார். அந்நாளில் மைலம் சுப்ரமணியர் ஆண்டுக்கொருமுறை மாசிமகத்தன்று புதுவைக்கு எழுந்தருள்வார். கவிஞர் பக்திப் பரவசத்துடன் சுப்பிரமணியர் மீது பாடல்களை இயற்றுவார். பக்திரசம் சொட்டச் சொட்ட பஜனைப் பாடல்கள் இயற்றித் தருவார். அந்தப் பக்திப் பாடல்களின் தொகுப்பு **1926**-ம் ஆண்டு "சுப்ரமணியர் துதியமுது" என்ற புத்தகமாக வெளிவந்தது. பக்தர்கள் அதைப் படித்துப் பாடி மகிழ்ந்தனர்.

வெறும் பக்தராக மட்டு மிருக்காமல், காங்கிரஸ் பக்தராகவும் கவிஞர் திகழ்ந்தார். அந்நாளில் அவரியற்றிய கதரைப் பற்றிய பாடல்கள் மிகமிகச் சிறந்தவை.

காங்கிரஸ்காரராகவும், கடவுள் பக்தராகவுமிருந்த கவிஞர் சுயமரியாதை இயக்கத்தில் அடியெடுத்து வைத்ததும், பக்தர் குழாமும், காங்கிரஸ்காரர்களும் வருந்தினர். தன்மான இயக்கத்திற்கோ ஒரு தனிப்பெருங் கவிஞர் கிடைத்தார்.

**1930**-ம் ஆண்டில் கவிஞர் "தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்"டை எழுதினர். அதன் மூலம் தன் புதிய எண்ணங்களை வெளியிட்டார். சுப்புரத்தினம் சீர்திருத்த வாதியாக, பகுத்தறிவு ஜோதியாக மாறிவிட்டார். அதன் பிறகு பற்பல கவிதைகள் எழுதி தமிழகத்தின் பேராதரவைப் பெற்ருர்.

அதன்பின் "சஞ்சீவி பர்வதத்தின் சாரல்" என்ற காதற்பாட்டை யியற்றினர். இது ஒரு நீண்ட கவிதை. இதில் கவிஞர் சீரிய கருத்துக்களை, புதுமை எண்ணங்களைப் புகுத்தினர்.

"கிட்டரிய காதற் கிழத்தி இடும் வேலை
விட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப் பாயாதோ!
கண்ணின் கடைப்பார்வை காதலியர்
காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்"

என்ற வரிகளைப் புகழாத இல்லை. அக் கவிதையின் சொல் நயத்தையும், பொருள் நயத்தையும் படித்துணர்ந்தோர் பாராட்டினர்.

"ராமாயண மென்ற நலிவு தருங் கதை
பூமியிலிருப்பதை இப்போதே அறிகின்றேன்.

C-, INB1 N53
MADRAS ARCHIVES LIBRARY EGMORE, MADRAS
10662

நம்பத் தகாதவெலாம் நம்பவைத்துத் தங்கள் நலம்
சம்பா திக்கின்ற சரித்திரக் காரர்களால்
நாடு நலிகுவதை நான் இன்று கண்டுணர்ந்தேன்."

என்பன போன்ற புத்தம் புது கருத்துக்களும், அதில் மிளிர்ந்தன.

கவிஞர் பின் "புதுவை முரசு" என்ற வாரப் பத்திரிகையை வெளியிட்டார். அதன் மூலம் தமிழ்நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும் தொண்டாற்றினர். புதுமைக் கவிதைகளினல் அறிவொளியைப் பெருக்கினர். அறியாமையை அழித்தார் "கைமைப் பழி", "மூடத் திருமணம்" என்பன போன்ற கவிதைகளை யியற்றினர்.

"காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே—கெட்ட
கைம்மையைத் தூர்க்காதீர்—ஒரு
கட்டழகன் திருத் தோளினைச்—சேர்த்திடச்
சாத்திரம் பார்க்கா தீர்"

என்ற 'கைமைப் பழி'யின் கடைசி அடி, விதவைத் திருமண விரோதிகளின் கல்லிதயத்தையும் கனியவைத்தது.

கவிஞரின் பாடல்கள் தமிழகமெங்கும் ஒலித்தன, அவர் பாடல்களை பொது மேடையில் பாடினர். பாரதியாரின் பாடலுக்குப்பின், மக்கள் பாராட்டைப்பெற்ற சிறந்த பாடல்களைத் தந்தவர் நம் கவிஞர் ஒருவரே!

கவிஞர் மக்கள் மன்றத்தில் உயர்ந்த மதிப்புப் பெற்ற பின்பும், சாதாரணமாகவே யிருந்தார், அவரையணுகி,

தம் கவிதையினைத் திருத்தித் தரும்படி எவரேனும் கேட்டால், பிற கவிஞரைப் போல மறுக்கமாட்டார். கவிதையைப் பார்த்து, படித்து ஏதாவது பிழை யிருந்தால் திருத்தி, முடிக்காம லிருந்தால் முடித்துத் தருவார்.

கவிஞர் புராண புளுகுகளை நம்பாதவர் மட்டுமல்ல; கண்டிப்பவருங்கூட. எதையும் நகைச்சுவையுடன் பேசுவதில், எழுதுவதில் நிகரற்றவர். அவரிடம் ஒருசமயம் ஒருவர் ஒரு பாட்டு எழுதிக்கொண்டு வந்து கொடுத்தார். அப்பாட்டு "காசியில் இறக்கமுத்தி, கைலையில் பிறக்க முத்தி......" என்று ஆரம்பித் திருந்தது! ஆனல் அவர் மூன்று அடிகளை மட்டுமே எழுதியிருந்தார். கவிஞரிடம் "கடைசி அடி எனக்கு வரவில்லை. இதை முடித்துக் கொடுங்கள் என்று கேட்டார். கவிஞர் "...எனும் புராணக் கூற்றினைக் கொள்வாருண்டோ?" என்று நாலாவது அடியைச் சேர்த்துப் பாட்டை முடித்துக் கொடுத்தனுப்பினர்.

கவிஞர் **1935**-ம் ஆண்டில் "சுப்பிரமணிய பாரதியார் கவிதா மண்டலம்" என்ற பெயரால் ஒரு பத்திரிகை நடத்தினர். அது முழுக்க முழுக்க கவிதை மயமாகவே காட்சியளித்தது. மக்களின் நல்லாதரவையும் பெற்றது. என்ருலும் அது நடுவே நிறுத்தப் பட்டது.

கவிஞர் நிறைய கவிதைகள் எழுதியிருந்தார். ஆனல் அவை பெரிய புத்தகமாக வெளிவரவில்லை, சிறு புத்தகங்கள் ஒன்றிரண்டு வெளிவந்திருந்தன. **1938**-ஆண்டு கவிஞரின் கவிதைகளை ஒன்றுதிரட்டி 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற தலைப்பில் பெரிய புத்தகமாக வெளியிடப் பட்டது. தமிழ்நாட்டில் புத்தகங்கள் விற்பனையாவதே சிரமம். ஒரு

பதிப்பு வெளியாகி, அத்துடன் நின்றுவிட்ட புத்தகங்கள் மிகப் பல. நாவல், சிறுகதை என்றால் சுமாராக விற்பனையாகும். கட்டுரை என்றால் விற்பனை மட்டம்தான். அதிலும் கவிதைப் புத்தகம் என்றால், அது அதிகம் விற்பது முயற்கொம்பே! அந்நிலையில் கவிஞரின் கவிதைத் தொகுதி குறுகிய காலத்தில் விற்பனையாகி விட்டது. மேலும் பல பதிப்புகள் வெளிவந்தன.

கவிஞரின் நூல்களைத் தமிழுலகு முழுதும் முழு மனதோடு பாராட்டியது. அப்புத்தகங்களை மக்கள் திருப்பித் திருப்பிப் படித்தும் திருப்தியடையாமல், மேலும் படித்துச் சுவைத்துக்கொண்டேயிருந்தனர். தமிழ் நாட்டின் பிரபலஸ்தர்களெல்லாம் அந்நூலைப் பாராட்டினர்; கவிஞரின் கொள்கையை ஒப்புக்கொள்ளாதவர்களும், மாற்றுக் கட்சியினரும், சமயப் பற்றுள்ளவர்களும் அந்நூலை ஒருங்கே பாராட்டினர்.

அந்நூலை, 'தமிழநாட்டுக்கு ஒரு சிறந்த பொக்கிஷம்' என்றார் திராவிடத் தந்தை பெரியார் இராமசாமி. திரு. வ. ராமசாமி ஐயங்கார் (வ. ரா.) அந்நூலைப் படித்துவிட்டு ஆவேசத்தையும், உணர்ச்சியையும் வெள்ளமாகக் கொட்டும் உயர்க்கவி பாரதிதாசன்" என்றார். "பாரதியார் பாட்டின் நலம் அவைகளில் ததும்புகின்றன" என்றெழுதினர். கா. சுப்பிரமணிய பிள்ளை, ரா. மு. வேங்கடசாமி நாட்டார் "பாரதிதாசன் இயற்கையிலேயே கவித்துவமும், கற்பனு சக்தியும் வாய்ந்தவரென்பதைக் கவிதைகள் புலப்படுத்துகின்றன" என்றார். "இத்தமிழ்ப் பாடல்கள் கிளர்ச்சியினையும் மகிழ்ச்சியினையும் பயந்து, சீர்திருத்தங்கள் பலவற்றிற்கு வழிகாட்டுமெனக் கருதுகின்றேன்"

என்றார். மறைமலையடிகள், எஸ். வையாபுரிப் பிள்ளை, "இவற்றிலே காணப்படும் புதுமையும், ஆற்றலும், சுவையும் பெரிதும் பாராட்டுதற்குரியன" என்றார். மற்றும் பல பெரியவர்களும், இந்து, செந்தமிழ்ச் செல்வி முதலிய பத்திரிகைகளும், எந்த நூலையும் பாராட்டாத அளவு பாராட்டியிருக்கின்றனர்.

'பாரதிதாசன் கவிதைகள்' வெளிவந்த பின்னர் கனக-சுப்புரத்தினம் என்ற பெயர் நிரந்தரமாக மறைந்து, பாரதிதாசன் என்ற பெயரே நிலைத்து நின்று வழங்கி வருகிறது.

பாரதிதாசனின் நூல்களுக்குத் தமிழகத்தில் ஒரு நல்ல மதிப்பு ஏற்பட்டவுடன் பல நூல்கள் வெளிவந்தன. குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, எதிர் பாராத முத்தம், நல்ல தீர்ப்பு, அமைதி போன்ற பல நூல்கள் தமிழர்க்கு நல்விருந்தாய் வெளிவந்தன.

'குடும்ப விளக்'கில் கவிஞர் ஒரு நல்ல குடும்பத்தை உருவாக்கித் தந்தார். 'குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம். நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்' என்ற நல்ல கருத்தை உள்ளடக்கியது அந்நூல். அந்நூலுக்கிருந்த அமோகமான ஆதரவு கண்டு அதைப் பின்பற்றி குடும்ப விளக்கு இரண்டாம் பாகம், மூன்றும் பாகம் என்று பல பாகங்கள் தொடர்ந்து எழுதினார்.

கவிஞரின் 'எதிர்பாராத முத்தம்' ஓர் உயரிய காதற் காவியம். உலக காதற் காவியங்களெனப் போற்றப்படும் 'ரோமியோ - ஜூலியத்' 'லைலா - மஜ்னு' போன்றவைகளுடன் ஒப்பிடத் தகுந்த நூல். அதுமட்டுமின்றி அந்

நூல்களைப் போலவே, கவிஞரின் நூலும் துன்பியல் நூலாகும். அதன் கதை யமைப்பையும், அதிலுலாவும் அழியாத சிரஞ்சீவி கதாபாத்திரங்களையும் கண்டு, சேலம் மாடர்ன் தியேட்டர்ஸார் அதைப் படமாக்க முற்பட்டனர். 'எதிர்பாராத முத்தம்' 'பொன்முடி' என்ற புது மகுடம் சூட்டிக்கொண்டு திரையுலகில் உலாவி பெரும் புகழ் பெற்றது. ஆனால் அதில் ஒரே ஒரு குறை! துன்பியல் கதையினை இன்பியலாக மாற்றியமைத்துவிட்டனர்.

பாரதிதாசன், பல படங்களுக்கு கதை வசனம் பாடல்கள் எழுதிக் கொடுத்துள்ளார்.

பாரதிதாசனின் மற்றொரு சிறந்த காவியம் 'பாண்டியன் பரிசு.' இந்நூல் பல்சுவை நிரம்பிய நூல். நரிக்கண்ணனின் தூண்டுதல்மேல் வேழநாட்டு மன்னன், கதிர்நாட்டின்மீது போர்த் தொடுக்கிறான். நயவஞ்சக நரிக்கண்ணன் கதிர்நாட்டுமன்னனையும், அவன் மனைவியையும், தன் தங்கையுமான கண்ணுக்கினியாளையும் கொன்று விட்டு, இளவரசி அன்னத்தையும் கொல்ல முயற்சித்துத் தோற்கிறான். பாண்டியன் பரிசைக் கைப்பற்றுகிறான். ஆனால் அது அவன் கைவிட்டு நழுவுகிறது. அன்னமும் அவள் தோழி ஆத்தாவும் நரிக்கண்ணனின் செய்கையை, அவன் முடிசூட்டிக்கொள்ளும் நேரத்தில் வெளிப்படுத்துகின்றனர். வேழநாட்டு மன்னன், அன்னத்தின் விருப்பப்படி, மறைந்த பாண்டியன் பரிசை மீட்டுத் தருவோர்க்கு அன்னம் மனைவியாவாள் என்று முரசறைவிக்கின்றான். நரிக்கண்ணனின் சூழ்ச்சிகள் யாவும் முறியடிக்கப்படுகின்றன. ஆத்தாவின் மகன் வேலன் பாண்டியன் பரிசை

சேர்ப்பித்து அவளை மணந்து மகிழ்கிறான். இதுதான் கதை.

கதையில் கவிஞர் சிருஷ்டித்துள்ள வீரப்பெண்டிர், பழந்தமிழ் நூல்களிலும் காணக்கிடைக்காதவர்கள். புறநானூற்றில், பகைவர்க்கு முதுகு காட்டிய தன் மகன் பகைவர்க்கு முதுகு காட்டியிருந்தால், அவனுக்குப் பாலூட்டிய மார்பை அறுத்தெறிவேன் என்ற வீர மாதைக் கண்டிருக்கிறோம். நாடு காக்க நடக்கும் போருக்கு, சின்னஞ்சிறு மகனை 'போய்வா மகனே' என்றனுப்பிய மறத்தமிழச்சியைக் கண்டிருக்கிறோம். பாரதிதாசன் பாண்டியன் பரிசில் காட்டும் வீரப் பெண்களையும் பார்ப்போம்.

நரிக்கண்ணன் வேழ நாட்டின் படைத் தலைவன்; கதிர்நாட்டரசி கண்ணுக்கினியாளின் அண்ணன். ஆனால் நயவஞ்சகன். கதிர் நாட்டின் படைகள் நல்ல நிலைமையில் இல்லை என்பதை அவனொருவனே அறிவான். அவன் கதிர்நாட்டைக் கவரும் நோக்கத்தோடு வேழநாட்டு மன்னனைத் தூண்டிவிட்டு, அவனது பெரும் படையோடு வருகின்றான்.

சதிராடு கூட்டத்தில் அரசனுடனிருந்த அரசி, தன் தமையன் தன் நாட்டின்மீது படையெடுத்து வருவதை அறிகின்றாள். மன்னன் 'என் வெற்றி உன் துன்பம் அன்றோ பெண்ணே' என்று மொழிகிறான். கண்ணுக்கினியாள் அண்ணன்பால் சினங் கொள்ளவில்லை. மன்னன் முன்னும், மற்றவர் முன்பும் வஞ்சினம் கூறுகிறாள்.

"என் அண்ணன் இந்நாட்டில் நுழைவ தாயின்
என் உயிரில் நுழைந்ததன்பின் நுழைக! நானோ
அன்னவனின் உயிர்குடித்த பின்னரே இவ்
அரண்மனையில் அகத்தூய்மை நிரம்பப்பெற்றே
என்கால் வைப்பேன் உறுதிஎன்றாள்."

அண்ணனேயானாலும், தன் நாட்டில் நுழைவதை விரும்பாத வீராங்கனை. அவனைக் கொல்வேன், என்னைக் கொன்றபின்பே வேண்டுமானால் உள்ளே வரலாம் என்று கூறுகிறாள். அண்ணனைக் கொல்ல அழகிய தேரேறி புறப் பட்டுச்செல்கிறாள் கண்ணுக்கினியாள். அவளது வீரத்தை எவர்தான் போற்றார்?

கண்ணுக்கினியாளின் வீரம் கண்டோம்; அவள் மகள் அன்னத்தின் தோழி ஆத்தாவின் வீரச் செயலையும் காண் போம். அன்னம் புல்லூரில் ஒரு சிறு குடிசையில் ஆத்தா வுடனிருக்கிறாள். நரிக்கண்ணனின் ஆட்கள் அன்னத்தைக் கவர்ந்து செல்ல அங்கு வருகின்றனர். அந்நேரத்தில் அங்கு வந்த வேலன்—ஆத்தாவின் ஒரே மகன் தனியே அவர்களுடன் போராடுகின்றான். இதற்குள் ஆத்தாவும், அன்னமும் உருமாறி வெளியேறுகின்றனர். அப்போது அன்னம் ஆத்தாவின் மகன் பலரிடம் தனியே போர் புரி கிறானே, அவன் நிலை என்னமோ என்று எண்ணி வருந்து கிறாள், அருகிலிருந்த ஆத்தாவிடம் 'வேலனின் நிலை என்ன' என்று கேட்கிறாள். அன்னம், வேலனை யறியாத பிறிதொரு உறவுமில்லாத பெண். அவள் வேலனின் நிலைக்காகக் கவலை கொள்கிறாள். ஆனால் ஆத்தாவோ சிறி தும் வருந்தவில்லை. அன்னத்தின் கேள்விக்கு அவளளித்த பதிலென்ன?

"உன் மகனின் நிலை என்ன" என்றாள் அன்னம்.

"ஊர் மீட்கச் சாகட்டும்" என்றாள் ஆத்தா!

அவள் "என் மகன் ஊர் மீட்கச் சாகட்டும்" என்கிறாள், பெற்றவுள்ளம் மகனுக்காக சிறிதும் கவலைகொள்ளவில்லை. நாடு, நன்மகனைவிட நனிசிறந்ததாகக் கருதுகிறாள் அத்தமிழச்சி! அவளைப் போன்று தமிழச்சியை வேறெந்த இலக்கியத்தில் நாம் காணமுடியும்? 'பாண்டியன் பரிசு' இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற காவியம் என்றால் மிகையாகாது.

அந்நாளில், இன்று 'கல்கி' என்னும் வார இதழுக்கு ஆசிரியராக விருக்கும் ரா. கிருஷ்ணமூர்த்தி 'ஆனந்த விகட'னின் ஆசிரியராகப் பணியாற்றினார். 'கல்கி' என்ற பெயரிலும், 'ரா. கி' என்ற பெயரிலும் விகடனில் எழுதி வந்தார்.

கல்கி பார்ப்பனர்; பாரதியாரும் பார்ப்பனர். இருவரும் ஒரே சாதியினரே தவிர, ஒரே வித நோக்கமுடையவர்களல்லர். பாரதியார் புதுமை வேட்கைக் கொண்ட வரகவி. அவர் மூடக்கொள்கைகளை சாடினார், சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாக இருப்பவற்றைத் தூற்றினார்; தூக்கி யெறியும்படி கூறினார். சாதிகளில்லையடி பாப்பா' குலம் தாழ்ச்சி உயர்வு சொல்லல் பாவம்" என்று பாடினார். 'மனிதர் யாரும் சரிகர் சமானமாக வாழ்வோமே' என்றார். 'அன்பென்று கொட்டு முரசே, மக்கள் அத்தனைபேரும் நிகராம்' என்று முரசுக் கொட்டினார். தமிழ் மொழியைத் தள்ளி பிறமொழி மோகம் கொண்ட அந்த நாளில் 'யாமறிந்த மொழி

களிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்' என்று பாடினார்.

இவை கல்கியாரின் கொள்கைக்கோ, இனத்திற்கோ ஏற்றதா? எப்படிப் பொறுப்பார் கல்கியார். அவர் பாரதியார் மீது பாய்ந்தார். தன் தாய்மொழியைப் பாரதியார் போற்றிப் புகழ்ந்ததே, அந்தப் 'பூசுரர்' வழிவந்த கல்கியாருக்குப் பொறுக்கவில்லை. 'நம் தேவபாடை' சமஸ்கிருத மொழியைப்பற்றி, நம் இனத்தில் வந்தவர், நன்றாகப் பாடும் ஆற்றல் பெற்றும் பாடவில்லையே என்று கோபித்திருப்பார். அவர் விகடனில் தீட்டிய கட்டுரையொன்றில் பாரதியாரை தாழ்த்தி, அவர் கூற்று உயர்ந்ததோ, சரியானதோ அல்ல அதை நான் ஒப்புக் கொள்ளவில்லை என்று எழுதியிருக்கிறார். அவர் அன்று எழுதியது பின் வருமாறு:

"எனக்குத் தெரிந்த பாஷைகளுக்குள்ளே தமிழ் பாஷையைப் போல் இனிமையானது எங்கும் இல்லை என்று சொல்கிறார் (பாரதியார்). பாரதியாருக்கு எத்தனை பாஷை தெரிந்திருந்தது என்பது முதல் கேள்வி. அதிகமாய்ச் சொன்னாலும் நான்கு ஐந்து பாஷைகளுக்குமேல் தெரிந்திருக்க நியாயமில்லை. கதையில் கிணற்றுத் தவளை சொல்லிற்று:— "நான் பார்த்திருக்கிறதற்குள்ளே இந்தக் கிணற்றைவிடப் பெரிய சமுத்திரம் எதுவும் கிடையாது" என்று பாரதியாருக்குத் தெரிந்திருந்த சில பாஷைகளுக்குள்ளே தமிழ் அவருக்கு இனிமை மிக்கதாகத் தோன்றியிருக்கலாம். ஆனால் அதைக்கூட நான் **ஒப்புக்கொள்ளவில்லை.**"

கிணற்றுத் தவளையோடு, தமிழ் நாட்டுப் பெருங் கவிஞர் பாரதியாரை ஒப்பிட்ட, 'உழைக்காத' கூட்டத்தைச் சார்ந்த கல்கி நகைச்சுவை நிரம்பி வழிய எழுதினர். இவ்வளவும் தமிழைப் புகழ்ந்ததற்காக. பார்ப்பனனுக்கு தமிழைப் புகழ்வதே பிடிக்கவில்லை. இதை நோக்கும் போது நம் கவிஞர்

"வஞ்சகர் வந்தவர் தமிழில் செழித்தார்
வாழ்வில் உயர்ந்த பின் தமிழையே பழித்தார்',

என்று கூறுவது எவ்வளவு உண்மை.

பாரதியார் பொதுவாகச் சாதிகள் வேண்டாம் என்று கூறியதுடன் நிற்கவில்லை. தம் இனமாகிய பார்ப்பன இனம் செய்யும் சூழ்ச்சியையும், வஞ்சகத்தையும் இகழ்ந்தார். பார்ப்பனர்கள் உழைக்காது, உண்டு உல்லாச வாழ்க்கை நடத்துவதைக் கண்டு கொதித்தார். பிறர்க்கொரு நீதியும், பார்ப்பனனுக்கொரு நீதியுமாக இருப்பதை கண்டித்தார்.

"பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே" என்று ஆனந்தப் பள்ளு பாடினர். "சூத்திரர்கோர் நீதி தண்டச் சோறுண்ணும் பார்ப்பனனுக்கு வேறோர் நீதி" என்று நீதிக்குப் புறம்பானதை எடுத்துரைத்தார். இப்படி பார்ப்பனர்களைப் பற்றிப் பாடுவது பார்ப்பனர்களுக்குப் பிடிக்குமா? பாரதியாரையும் அவர்தம் பாடல்களையும் வெறுத்தனர், பல பார்ப்பனர்.

பார்ப்பனர்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு வாதாட வந்தார் கல்கியார். உடனே தன்வசமிருந்த

ஆனந்த விகடனில் தன்னை ஒருபெரிய இலக்கிய விமரிசக ராக எண்ணிக்கொண்டு பாரதியாரைப் பற்றி எழுதினர். அவரது பாடல்களை அலசினர். மரக்கட்டைகளாக இருந்த மனிதருக்குச் சுதந்திர உணர்ச்சியூட்டி, 'என்று தணியுமிந்த சுதந்திரதாகம்' என்று ஏங்குமாறு செய்த பாரதியாரை—கட்சியைக் காட்டி கைக்கூலி வாங்கி, உடலை வளர்த்த உலுத்தர்களையும், நெஞ்சார வஞ்சகம் செய்யும் வாய்வீச்சுககாரர்களையும் கண்டித்து 'நெஞ்சி லுரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி, வஞ்சனை செய்வா ரடி கிளியே வாய்ச் சொல்லில் வீரரடி' என்று கிண்டல் செய்த பாரதியாரை, கல்கியார் மனம் துணிந்து, நீதிக்கும் நேர்மைக்கும் விடைகொடுத் தனுப்பிவிட்டு, பிறநாட்டுப் பேரறிஞர்கள் தம் இனத்தை வருணித்தற்குச் சிறிதும் மாருமல் பாரதியார் உலக கவியல்ல என்று எழுதினர். அவர் பாடல்களில் குற்றங் குறைகள் உள்ளன; வெறுக் கத்தக்கவை இல்லாமலில்லை என்று எழுதினர்.

எந்தக் கல்கியார் எழுதினர் தெரியுமா? பாரதியார் மறைந்த பல ஆண்டுகளுக்குப் பின் இந்தியா 'விடுதலை' யடைந்த பிறகு, பாரதியாருக்கிருக்கும் புகழைக்கண்டு எந்த கல்கியார் மலைத்தாரோ அவர் எழுதினர். பாரதியா ரைத் தாமும் புகழாமல், எதிர்த்தெழுதினல் விழித்துக் கொண்ட தமிழர் சும்மா விடமாட்டார்கள் என்று எந்த கல்கியார் உணர்ந்து பக்கம் பக்கமாக உயர்த்தி எழுதினரோ அந்தக் கல்கியார், பாரதியாரைத் தூற்றினர். 'கல்கி' வார இதழில் பிறரை ஏமாற்ற பாரதியாரின் பாடல்களை பல படங்களுடன் எந்த கல்கியார் வெளியிட் டாரோ, அவர் அன்றுகிண்டல் செய்தார். 'பாரதியாருக்கு ஒரு ஞாபகச் சின்னம் வேண்டும் தமிழ்நாட்டாரே பொன்

தருவீர்' என்று நிதி வசூலித்து, பாரதியாருக்கு மண்டபம் கட்டி அவரைப்பற்றி வானளாவ எந்த மனிதர்புகழ்ந்தாரோ அவர்தான் அன்று பாரதி உலககவி அல்ல என்றெழுதினர்.

விசித்திரமாக இருக்கிறது! நேற்று தூற்றினர்; இன்று போற்றுகிருர். இவரை 'இரட்டை நாக்குக்காரர்' என்றழைத்தால் குற்றமென்ன?

பாரதியாரைப் பற்றி ரா. கி. என்ற பெயரில் கல்கியார் எழுதியவற்றைப் படித்துப் பதைபதைத்தார். பாரதிதாசன், பாரதியார் தமிழ் நாட்டிற்கும் மொழிக்கும் செய்த நற்றொண்டை நன்கறிந்த அவர் கல்கியின் தூற்றல் பாணங்களைக் கண்டு துடித்தெழுந்தார். எரிமலையெனக் குமுறிய அவர் நெஞ்சத்திலிருந்து எழுந்தது ஒரு பாடல். கைப்போன போக்கில் எழுதி ரா. கி.யின் கட்டுரைக்கு மறுப்பாக அமைந்தது அக்கவிதை.

'பாரதியார் உலககவி' என்று துவக்கினர் தம் பாடலை. அதில் பாரதியாரின் கவிதா சக்தியைப் புலப்படுத்தினர். அவர் பாடல்கள் உயர்ந்தவை என்றெழுதினர். 'தராதலத்துப் பாஷைகளில் அண்ணல் தந்த தமிழ்ப் பாட்டை மொழி பெயர்த்தால் தெரியும் சேதி' என்றுரைத்தார். அவர் பாடலை வெறுப்பவர்களைக் கண்டித்தார். அவர்கள் கண்டிக்கும் காரணத்தையும் கண்டுபிடித்துரைத்தார்.

"'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே'
யென்று பாரதியார் பெற்ற கீர்த்தி
போய்ப்பாழும் கிணற்றினிலே விழாதா என்று

பொழுதெல்லாம் தவங்கிடக்கும் கூட்டத்தார்கள்
வேர்ப்பார்கள்; பாரதியார் வேம்பென்பார்கள்;
வீணாக உலககவி அன்றென்பார்கள்
ஊர்ப் புறத்தில் தமக்கான ஒருவனைப்போய்
உயர் கவிஞன் என்பார்கள் வஞ்சகர்கள்."

—என்று பாடினர். 'பாரதியார் கவிதைக்கு இழுக்கு கற்பிக்கின்றவர்களே! அழகாக முடிச்சவிழ்த்தார் விடுவார் உண்டோ?' என்று முடித்தார். தம் ஆசிரியரான பாரதியாரைத் தூற்றியவர்க்கு நல்ல சூடு கொடுத்த பாரதிதாசனைப் பாராட்டாதார் யார்?

சென்னை அரசாங்கத்தார் ஆச்சாரியார் ஆட்சி காலத்திலும், ஓமந்தூரார் ஆட்சி காலத்திலும் வேண்டாத இந்தி மொழியினைக் கட்டாயப் பாடமாக்கினர். இருமுறையும் தமிழர் இந்தியை எதிர்த்துப் போர் புரிந்து வெற்றி கண்டனர். கவிஞர் இருமுறையும் இந்தியை எதிர்த்தார். சென்னையில் கூடிய 'இந்தி எதிர்ப்பு மாநாட்டி'லும் கலந்துகொண்டு வீரவுரையாற்றினர். அவர் இந்தியை எதிர்த்து எழுதிய பாடல்கள் தமிழரின் உள்ளத்தைத் தொட்டன; உணர்ச்சியைக் கிளப்பின; இந்தியை எதிர்க்க எண்ணற்ற தொண்டர்களைத் தந்தன.

"எப்பக்கம் வந்து புகுந்துவிடும்—இந்தி
எத்தனைப் பட்டாளம் கூட்டிவரும்."

"தூங்குதல் போன்றது சாக்காடு—பின்னர்
தூங்கி விழிப்பது நம் பிறப்புத்
தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம்—உயிர்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை."

என்பன போன்ற இந்தி எதிர்ப்புக் கவிதைகள் நாடெங்கும் முழங்கின. பின்னர் அவை புத்தக உருவிலும் வெளி வந்தன.

பாரதிதாசன் பல நாடகங்கள் இயற்றியுள்ளார். படித்தப் பெண்கள், கழைக்கூத்தியின் காதல், இரணியன் அல்லது இணையற்ற வீரன், சேரத்தாண்டவம் ஆகியவை அவற்றுள் சில. இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்ற நாடகம் இனவெழுச்சியூட்டும் சிறந்த நாடகம். ஆரியரின் சூழ்ச்சியினை அம்பலப்படுத்தி, திராவிடர் ஏமாந்த விதத்தினை விவரித்துரைக்கிறது அக்கதை. அந்நாடகம் நாட்டின் பல பாகங்களிலும் நடைபெற்றது. நல்ல நூல்களையும், நாடகங்களையும் விரும்பாத இந்தச் சர்க்கார் 'இரணியன்' நாடகத்தை நடத்தக்கூடாதென்று தடையுத்தரவு பிறப்பித்தது. கவிஞரின் நாடகத்தைத் தடையை மீறி பல ஊர்கள் இயக்கத் தோழர்கள் நடத்தினர். நாடகத்தினிடை அவர்கள் கைது செய்யப்பட்டனர். இன்னும் 'இரணியன்' நாடகத்தின் மீதுள்ள தடையை நீக்கவில்லை.

கவிஞர் 'கவிதா மண்டல'த்தைப்போல 'குயில்' என்ற பத்திரிகையை நடத்தினர். அதில் கவிதைகளுடன் நாடகங்களும் வெளிவந்தன. அப்பத்திரிகையும் சர்க்காரின் ஆதரவு கிடைக்காததால் இடையில் நிறுத்தப்பட்டது.

கவிஞர் ஒரு நல்ல சொற்பொழிவாளர். அவர் ஆற்றிய சொற்பொழிவுகளில் சில 'கவிஞர் பேசுகிறார்' என்ற புத்தகமாக வெளிவந்தது.

**1950**-ஆம் ஆண்டு மே மாதம் **27, 28** தேதிகளில் கோயமுத்தூரில், 'முத்தமிழ் வளர்ச்சி மாநாடு' கூட்டப் பட்டது. அதற்கு நம் கவிஞர் தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டார். தலைமை வகித்து மாநாட்டைச் சிறப்புற நடத்தித் தந்தார். கவிஞர் தம் தலைமையுரையில், "இயற் றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் மூன்றும் ஒன்றைவிட் டொன்று பிரிக்க முடியாதபடி இயற்கை முறையில் அமைந்துள்ளது, மரத்தின் வேர், அடிமரம், கிளைவகை போல வேறெந்த மொழிகளிலும் இப்படியில்லை; இருக்க வும் முடியாது; தமிழ்ச் சொல்லில்தான் மெய்ப்பாட்டு வளம் அமைந்திருக்கிறது. ஏனெனில் தமிழ்போல் தொன்மை வாய்ந்த மொழிகள் இருக்கலாம். ஆனால் தமிழின் பண்பாட்டிற்கு மற்ற மொழிகள் அனைத்தும் பிற்பட்டவை என்று கூறுவேன். நாகரிகத்திலும் அப்ப டியே, தமிழன் தமிழின் இயற்கையால் ஒவ்வொன்றிலும் இசையையும், நாடகத்தையும் கண்டான்; இன்றல்ல, நேற்றல்ல, அகத்தியர் காலத்திற்கு முன்னேயே!" என்று குறிப்பிட்டார்.

**1946**-ம் ஆண்டில் முல்லை - முத்தையா அவர்கள் பாரதிதாசனைப் பற்றி தமிழ் நாட்டுப் பேரறிஞர்களின் கருத்துரைகளைத் திரட்டி 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்' என்ற பெயரில் ஒரு தொகுப்பு நூலை வெளியிட்டார். எல்லா கட்சியினரும் ஒருங்கே கவிஞரைப் பாராட்டி, அவரது கவிதைகளைப் புகழ்ந்து எழுதி யிருந்தனர்.

பாரதிதாசன் உலக கவிஞர்களின் பட்டியலில் இடம் பெறவேண்டிய ஒருவர், அவர் கவிதைகள் மாசற்ற பொன்; மதிப்பறியா முத்து; காணக்கிடைக்காத ஓவியம்; கரையாத

கற்கண்டு; தெவிட்டாத தேன். அவர் கவிதைகளிலே வசந்த காலத்து இளந்தென்றலைக் காணலாம்; உலகை குலுக்கும் புயலைக் காணலாம்; ஊழிக்காலத்துப் பெரு வெள்ளத்தைக் காணலாம்; சிற்றருவின் இனிய ஓசையைக் கேட்கலாம்.

புரட்சிக் கவிஞரின் பாடல்கள் 'வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி' யுண்டாக்குபவை. 'விசையொடிந்த தேகத்தில் வன்மை' சேர்ப்பவை. 'சூழ்ச்சி தன்னை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர்நிறுத்தித் தூள் தூளாக்'குபவை.

கவிஞர் பாடுபடும் பாட்டாளிகளின் நல்வாழ்விற்காகப் பாடல்கள் பல இயற்றியுள்ளார்; தொழிலாளர்களின் அவல நிலையை நாட்டு மக்களுக்கு அதன் மூலம் காட்டினார்.

"கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார் கை?
பொற்றுகளைக் கடல் முத்தை மணிக்குலத்தைப்
போஎடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?"

—என்று தொழிலாளர்கள் சார்பில் கேட்டார்?

"கந்தை யணிந்தோம்—இரு
கையை விரித்தெங்கள் மெய்யினைப் போர்த்தோம்
மொந்தையிற் கூழைப்—பலர்
மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடந்தோம்
சந்தையில் மாடாய்—யாம்
சந்ததம் தங்கிட வீடுமில்லாமல்
சிந்தை மெலிந்தோம்—எங்கள்
சேவைக் கெலாம் இது செய்நன்றிதானோ?"

—என்று பாட்டாளிகளின் இன்றைய நிலையை விளக்கிக் கூறினார்.

“ஊரிலேனும் நாட்டிலேனும்
உலகிலேனும் எண்ணினால்
நீர் நிறைந்த கடலையொக்கும்
நேர்உழைப் பவர்தொகை
நீர்மிதந்த ஓடமொக்கும்
நிறைமுதல் கொள்வோர்தொகை
சூறை ஒன்று மோதுமாயின்
தோணி ஓட்டம் மேவுமோ?”

—என்று அவர்கள் சார்பில் முதலாளிகளைக் கேட்டார்! சூறை ஒன்று மோதுமாறு வைத்துக் கொள்ளாதீர்கள் என்று எச்சரிக்கை செய்தார். கவிஞரைப்போல தொழிலாளர்களின் நிலையை வேறெந்தக் கவிஞனும் எடுத்துரைத்ததில்லை.

பத்திரிகையைப் பற்றி கவி பாடியதைபோல, வேறு எவர் பாடியுள்ளார். பத்திரிகையை ஒரு பெண்ணாகச் சித்தரித்து, அதன் பயனையும் பண்புகளையும் நன்றாக விவரிக்கிறார். பத்திரிகையை அவர் வருணிப்பதைச் சிறிது படித்துப் பாருங்கள்.

“காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணீர்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்!
ஊரினை. நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே”

கவிஞர்கள் எதை மறந்தாலும் இயற்கையில் அழகில் மயங்க மறக்கமாட்டார்கள், இயற்கையோடு கொஞ்சி மகிழ்வார்கள்; கட்டிக் குலாவுவார்கள். எல்லா கவிஞர் களுமே இயற்கையின் அழகைப் பருகிப் பருகி, பருகியதை கவிதை உருவாக்கித் தந்துள்ளார்கள். இயற்கையின் எழிலைக் கவிதையாகத் தந்தவருள் சிறந்தவர் வில்லியம் வேர்ட்ஸ் வொர்த் என்ற கவிஞர். அவரது கவிதைகளில் இயற்கை அன்னை நடனம் புரிவாள். வேர்ட்ஸ் வொர்த்தின் இயற்கையை வருணிக்கும் கவிதைகளைப்பற்றி எழுதும் விமர்சகர் ஒருவர் "இயற்கை யழகை உருவாக்கும் கவிதை களை வேர்ட்ஸ் வொர்த் எழுதவில்லை. இயற்கையே, கவி ஞரின் கையிலிருந்த பேனாவை வாங்கி எழுதியிருக்கிறது" என்று குறிப்பிட்டாராம். கவிஞர் பாரதிதாசன் ஷெல்லி யைப் போல சிந்திக்கத் தூண்டும் கவிதைகளை மட்டும் எழுதவில்லை; வால்ட்விட்மனைப்போல புரட்சிக் கவிதை களை மட்டும் எழுதவில்லை. வேர்ஸ் வொர்த்தைப் போல இயற்கை யழகை படம் பிடிக்கும் கவிதைகளையும் இயற்றி யுள்ளார். இதை கவிஞரின் 'அழகின் சிரிப்'பைப் படிப் போர் உணர்வார்கள்.

'அழகின் சிரிப்பு' என்ற நூலின் தலைப்பிலேயே மயங்கியவர்கள் பலர். அந்தத் தலைப்பைப் பாராட்டாத வர்களில்லை. தலைப்பைப்போன்றே உள்ளிருக்கும் கவிதை களும் இருந்தன. அந்நூலின் ஒவ்வொருவரியிலும் அழகு சிரித்தது; பேசியது; நடனமாடியது அந்நூலைப் படித்த வி. ஆர். எம். செட்டியார் இதை நான் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க விரும்புகிறேன்' என்று குறிப்பிட்டார்.

"காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்
கடற்பரப்பில், ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே, மலர்களிலே தளிர்கள் தம்மில்
தொட்ட இடம் எலாம் கண்ணில் தட்டுப்பட்டாள்!

மாலையிலே மேற்றிசையில் இலகுகின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்! ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளிகள் கூட்டந்
தனில் அந்த 'அழகெ'ன்பாள் கவிதை தந்தாள்"

'அழகின் சிரிப்பை' அழகாகப் படம் பிடித்துக் காட்டிவிட்டார் கவிஞர். அழகு அவரைப் பார்த்து சிரித்தது; அதைக் கண்டு அவர் சிரித்தார்; அச்சிரிப்பில் உருவாகியது கவிதைகளைக் கண்டு தமிழ்த்தாய் களிப்பு கொண்டு சிரித்தாள்; அவர் சிருஷ்டித்த கவிதைகளைப் படித்து தமிழர்கள் உள்ளம் மகிழ, உடல் குலுங்க சிரித்தார்கள்; சிரிக்கிறார்கள்.

கவிஞர் இனிய எளிய நடையில் எழுதுபவர். அவர் புத்தம் புது உவமைகள் படிப்பவரின் நெஞ்சை விட்டு நீங்காமல் நிலைநிற்பவை. உதாரணத்திற்குச் சில கீழே உள்ளவை.

"வேழவரின் படைவீரர் அரண்மனைக்குள்
விரிநீர் போய் மடைதோறும் பாய்வதைப்போல்
சூழலுற்றார்."

"………காட்சித் தேனில்
வண்டடி நாம் என்றுரைத்து மகிழ்ந்து நின்றாள்."

"தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த
கலப்பென இருள் தன் கட்டுக் குலைந்தது"

"கேள்வி இலார் நெஞ்சம்போல் இருண்டு நீளும்
வழக்குடையார் செல்வம்போல் மின்னி மாய்ந்து
வண்பொருளை இழந்தான்போல் அதிர்ந்து பின்னர்
மழைக் கண்ணீர் உகுத்தது வான்"

கவிஞர்கள், தத்துவ ஞானிகள், அரசியல் வாதிகள் உலகம் எப்படி யிருக்கவேண்டும் என்பதை எழுதி யிருக்கின்றனர். தாங்கள் காண விழையும் உலகத்தைக் கற்பனைக் கண்ணுல் கண்டு, எழுத்துருவில் அளித்துள்ளனர். நம் கவிஞர் காண விழையும் உலகம் ஒப்புயர்வற்ற புது உலகம். அவ்வுலகில் 'எல்லார்க்கும் எல்லாம்' என்றிருக்கும்.

"கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக் கசடர்க்கு தூக்கு மரம்' அங்கே யுண்டு. 'இல்லாரும் அங்கில்லை; பிறன் நலத்தை எனதென்று தனியொருவன் 'சொல்ல மாட்டானும். அவ்வையத்தில் எல்லாரும் நல்லவர்களாம். அவர்கள் வேண்டாத பழைய பஞ்சாங்கத்தை கிழித்தவைப் பற்றி கவலைக்கொள்ள மாட்டார்கள். கவிஞர் விரும்பிய அந்த உலகமாக, இந்த உலகம் எண்ணுறுமோ?

கவிஞர் இன்றை யுலகிலிருக்கும் ஏழைப் பணக்காரர் என்ற வேற்றுமையை அழிக்க, எல்லோரும் சமமாக வாழ ஒரு வழி கண்டுபிடித்துத் தருகிறர் 'உலகப் பண்பாட்டில் அவர் காட்டும் வழி என்ன தெரியுமா?

"ஓடப்பரா யிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால், ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ."

—இதுதான் அவர் காட்டும் வழி. அதன்படி நடந்தால் ஒரே ஒரு நொடிக்குள் சமத்துவம் ஏற்பட்டுவிடும் என்கிறர் கவிஞர். அதுவும் உண்மைதான். ஏனென்றல் உலகில் கொடிறுடைக்கும் கூன்கைய ரல்லாதவர்களுக்கு ஈர்ங்கை விதிராத கயவர்கள் அதிகம்.

குழந்தைகளைப் பலர் பலவிதமாக பெயரிட்டழைத்துள்ளனர். பாரதியார், 'சின்னஞ்சிறுகிளி, செல்வக்

களஞ்சியம், பிள்ளைக்கனியமுது, பேசும்பொற் சித்திரம்' என்றெல்லாம் வருணிக்கிறார். பாரதிதாசன் குழந்தைகளுக்கிடும் வேறு பெயர்களைப் பாருங்கள்:-

'பொன்னின் சிலை'

'ஓவியக் குழந்தை'

'பச்சைப்புரு'

'கன்னலின் சாறு'

'தேனின் பெருக்கு'

'செந்தமிழ்'

'சோலை மலர்'

'சுவர்ணத்தின் வார்ப்படம்'

'கற்பூர பெட்டகம்'

பாரதிதாசன் தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டுப் பெருமக்களுக்கும் செய்துள்ள தொண்டு அதிகம்; மிக அதிகம். ஆனாலும் அவர் சலிக்கவில்லை. மேலும் மேலும் அத்தொண்டிலேயே ஈடுபட்டிருக்கிறார். தமிழரின் தனிப்பெரும் நூல் திருக்குறள்! அந்நூலுக்குப் பலர் பல விதமாக வுரை எழுதியுள்ளனர். வள்ளுவரின் கருத்துக்கே மாறாகவும் சிலர் உரையெழுதியுள்ளனர். பாரதிதாசன் தற்போது திருக்குறளுக்குப் புத்துரையை, உண்மையுரையை அரும்பாடுபட்டு எழுதிவருகிறார். அவர் எழுதப் புகும் உரையைப் பல மேடைகளில் எடுத்துரைத்தார். அவ்வுரையைத் தமிழகம் ஆவலோடு எதிர்ப்பார்க்கிறது.

கிடைத்தற்கரிய கவிஞரான பாரதிதாசனை பெற்றது திராவிடம். அவர் செய்த தொண்டை பாராட்டியதுடன்

அவரைப் பாராட்ட, புகழ்மாலை சூட்டத் தவறவில்லை. **1946** ம் ஆண்டில் அறிஞர் அண்ணாத்துரை அவர்களின் முயற்சியால் சென்னையில் பச்சையப்பன் விளையாட்டு மைதானத்தில் கூடிய கூட்டத்தில் அவருக்கு பொன்னுடைப் போர்த்தினர். வெள்ளம் போன்ற தமிழர்கூட்டம். உடலினால் பலராய்க் காணப்பட்டாலும் உள்ளத்தால் ஒருவராகி அன்று கவிஞரைப் பாராட்டியது. அக் கூட்டத்தில் பல ஆயிரம் கொண்ட பொன்முடிப் போன்றும் கவிஞர்க் களித்தனர்.

கவிஞர் தம் ஐம்பதாமாண்டில் அவருக்குப் பொன்னுடை போர்த்திய தமிழகம் அறுபதாமாண்டில், மணிவிழா நடத்தி மகிழ்ந்தது. **1951** ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் கடைசிவாரத்தில் நடந்தது. பத்துநாட்கள் சிறப்பாக விழாநடந்தது. ஒவ்வொருநாளும் கலைஞர்களால் இசைவிருந்தும், நாடக விருந்தும் அளிக்கப்பட்டன. எந்தக் கவிஞரையும் இதைப்போல் அவர்தம் வாழ் நாளிலேயே மக்கள் போற்றியதில்லை; பொன்னுடை போர்த்தியதில்லை; பொற்கிழி யளித்ததில்லை. உலகில் எவருக்கும் கிடைத்தற்கரிய பெரும் பேரை—புகழை பெற்று விட்டார் நம் கவிஞர்.

அதுமட்டுமல்ல. வேறெந்த கவிஞர்களுக்கும் இல்லாத அளவு மாணவர்கள், கவிஞரைப் பின்பற்றி கவி புனைவர்கள் நம் கவிஞர்க்கு உண்டு. தமிழகத்தின் 'பாரதிதாசன் பரம்பரை' தோன்றி, செழித்து வளர்ந்து வருகிறது. கவிஞரின் பரம்பரையினர் கவிஞரைப்போல சிறந்த பாடல்களை இயற்றுவதில் வல்லவர்கள். வாணிதாசன், அண்ணாமலை, முடியரசன், நாரா, நாச்சியப்பன் போன்றோர் கவிஞரின் மாணவர்களில் ஒருசிலராவர்.

கவிஞர் தமிழை வளர்க்கும் தாய்; தமிழரை நல்வழிப் படுத்தும் ஆசிரியன்; வஞ்சிக்கப்பட்டவர்களின் சார்பில்

11 NBD N33

வாதாடும் வழக்கறிஞன்; மூடத்தனத்தின் முடைநாற்றத் தைப் போக்கும் கற்பூர பெட்டகம்; ஏமாந்த நேரத்தில் ஏற்றம் கொண்டு இங்குள்ள திராவிடரைச் சுரண்டும் ஆரியத்தின் வைரி; வீழ்ந்த திராவிடனுக்கு வாழ்வு உயர, நற்பாதைக் காட்டி 'நடந்துசெல்' என நவிலும் வழி காட்டி; திராவிடத்தின் மறையாத சூரியன், தேயாத சந்திரன்.

பாரதிதாசன், செந்தமிழ் பாண்டிய மன்னனைப் போல உடுத்திய உடையும் எடுத்த மார்பும் படைத்தவர்; அடர்ந்த மீசையுள்ளவர்; எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடுபவர் 'தமிழொளியை மதங்களிலே சாய்க்கா' தவர்; கொள்ளை நோய்போல் மதத்தைக் கட்டியழும் வைதீகத் தப் போராடிப் போராடி பூக்காமல் காய்க்கா மல் வேரோடு பேர்க்கும் வீரர்.

அவர் தந்த நூல்களைச் சுவைத்து மகிழ்ந்த தமிழகம் மேலும் பல நூல்களை அவரிடமிருந்து எதிர்பார்க்கிறது. தமிழ்த்தாய் அவரால் இன்னும் சிறிது உயர்வடைய காத்திருக்கிறாள். அவர், குழந்தைக் கவிஞர் அவர்கள் கூறியபடி 'பன்னெடுங்காலம் பரிதிபோல்' வாழ்ந்து, தமி ழரை த[illegible]த கவிதைகளால் மகிழ்விப்பாராக!

வாழ்க பாரதிதாசன்!

ARCHIVES LIBRARY MADRAS 10669

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1

20A6c
8-74

திராவிட இயக்கத் தலைவர்கள்

# வாழ்க்கை வரலாறுகள்

★

| | | | |
|---|---|---|---|
| 1. | அறிஞர் அண்ணாதுரை | 0 | 8 |
| 2. | தலைவர் பெரியார் | 0 | 8 |
| 3. | புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் | 0 | 8 |
| 4. | கடமை வீரர் கருணாநிதி | 0 | 8 |
| 5. | அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி | 0 | 8 |
| 6. | பன்னீர் செல்வம், பாண்டியனார், வேலாயுதம் | 0 | 8 |
| 7. | நெடுஞ்செழியன், நடராசன், மதியழகன் | 0 | 8 |
| 8. | சம்பத், நீலமேகம் | 0 | 8 |
| 9. | ஆசைத்தம்பி, சிற்றரசு | 0 | 8 |
| 10. | இராமாமிர்தத்தம்மையார், பூங்கோதை, அருண்மொழி, | 0 | 8 |

— கழிவு வழக்கம் போல் —

கிடைக்கும் இடங்கள்

**கலைமன்றம்**
122, வரதாமுத்தியப்பன்தெரு,
சென்னை—1

**M.S. ராமுலு கம்பெனி**
286, சைனா பஜார்
சென்னை—1